# சட்டவியல்
## (சட்டக் கோட்பாடு)
**(JURISPRUDENCE) (LEGAL THEORY)**

## 1. சட்டவியல் மற்றும் சட்டக் கோட்பாட்டிற்கான அறிமுகம்
**[INTRODUCTION TO JURISPRUDENCE / LEGAL THEORY]**

**பாடச்சுருக்கம்: (SYNOPSIS)**

அ. முன்னுரை
ஆ.சட்டவியலின் பரிணாம வளர்ச்சி
இ. சட்டவியலின் வரைவுரை
ஈ. சட்டவியலின் வகைகள்
உ. சட்டவியலின் தன்மை
அ. சமூக அறிவியல் என்ற முறையில்
ஆ. முறைசார்ந்த அறிவியல் என்ற முறையில்
ஊ. சட்டவியலும், பிற இயல்களுடன் அதன் தொடர்பும்
எ. சட்டவியலின் நோக்கங்கள் மற்றும் புறநிலைப் பொருள்கள்
ஏ. சட்டவியலை கற்பதனால் ஏற்படும் நன்மைகள்
ஐ. சட்டவியல் 'உயரிய உரிமை சாசனம்'
ஒ. முடிவுரை

### அ. முன்னுரை : (INTRODUCTION)

சட்டவியல் (சட்ட கோட்பாடு) என்றால் சட்டம் பற்றிய அறிவுத்திறன் அல்லது அறிவியல் எனப்படும். இது இயற்கை சட்டம் பற்றியும் மற்றும் மனித சமுதாய வாழ்க்கையில் இதன் ஊடுருவல்கள் பற்றியும் விளக்குவதற்கு முயற்சிக்கிறது.



சமூக வாழ்க்கையில் மனிதனுக்கும் சொத்துக்கும் இடையே யான தொடர்பு மற்றும் இதர மனிதர்களுடன் உள்ள தொடர்பு போன்றவைகள் இதில் உள்ளன.

இவ்வாறாக ஒவ்வொரு சட்ட முறையிலும் சொத்து, சொத்துரிமைகள், தண்டனையின் நோக்கங்கள் மற்றும் பொறுப்புகள் போன்றவைகளின் அடிப்படை கோட்பாடுகள் உள்ளன.

சட்டவியலானது அடிப்படை சட்டக் கோட்பாடுகளை கண்டுபிடிப்பதுடன் அவற்றை விளக்கவும் முயற்சிக்கிறது.

### ஆ. சட்டவியலின் பரிணாம வளர்ச்சி:
**(EVOLUTION OF JURISPRUDENCE)**

"சட்டவியல்" என்பது உருவாக்கப்பட்டதல்ல, ஆனால் பல நூற்றாண்டுகளாக படிப்படியாக வளர்ச்சியடைந்த ஒன்றாகும். பல காலங்களாக பல கோடிக்கணக்கான மக்களின் அமைதியான மற்றும் உறுதியான வளர்ப்பு முறையினால் இது ஏற்பட்டதாகும்.

சட்டவியலின் பரிணாம வளர்ச்சியானது பின்வரும் **மூன்று** கால கட்டங்களின் கீழ் அறியலாம்.

1. ரோமானியர் காலத்திற்கு முன்பு
2. ரோமானியர் காலத்தில்
3. ரோமானியர் காலத்திற்கு பின்பு

பழங்கால ரோமானியர் காலத்திற்கு முன்பு சட்டவியல் நடைமுறையில் கடைபிடிக்கப்படவில்லை. ஒழுங்கான மற்றும் தொடர்ச்சியான சட்டவியல் முறைகள் இருக்கவில்லை. நிலைத்து நிற்கக்கூடிய சட்டமுறைகள் எதுவும் இக்காலத்தில் இல்லை என சர்ஹென்றி மெயின் என்ற சட்ட நிபுணர் கூறுகிறார்.

ரோமானியர் காலத்தில்தான் சட்ட அறிவியல் உருவாகியது. சட்டவியல் என்ற இவ்வார்த்தையானது ரோமன் நாட்டின் தோற்றம் கொண்டது. இதன் அர்த்தம் "சட்டம் பற்றிய அறிவு" என்பதாகும்.

ரோமானியர்கள் மட்டுமே முதன்முதலில் சட்ட அறிவியலை ஒரு தனி கிளையாக பாவித்து படித்தனர். ரோமானியர் காலத்திற்கு பின்பு சட்டவியல் தனது தனித்தன்மையை இழந்து. மதம் சம்பந்தமான படிப்பின் ஒரு பகுதியாக விளங்கியது.

ஆனால் 19ம் நூற்றாண்டில் தான் இது மீண்டும் சுதந்திரமாக இயங்க ஆரம்பித்தது.

## இ. சட்டவியலின் வரைவுரை:
**(DEFINITION OF JURISPRUDENCE)**

### 1. ஆஸ்டின் : (Austin)

ஆஸ்டின் என்பவர் "இயங்கும் சட்டத்தின் (அரசுறுத்துச் சட்டம்) தத்துவமே சட்டவியல் ஆகும்" என விரிவுரை அளித்துள்ளார். குடிமக்களின் நடத்தையை ஒழுங்குறுத்தும் வகையில் அரசாண்மையினரால் விதிக்கப்படும் ஆணைகளே சட்டம் என்பது இதன் பொருளாகும்.

### 2. சால்மண்ட் : (Salmond)

சட்டவியல் என்பது சட்ட அடிப்படைக் கொள்கைகளை அறியும் ஆரம்ப அறிவியல் என சால்மன்ட் வரைவுரைக்கிறார். அதாவது உரிமையியல் சட்டத்தின் கோட்பாடுகளைப் பற்றி மட்டும் சட்டவியல் கூறுகின்றது என்பது இதன் அர்த்தமாகும்.

உரிமையியல் சட்டம் என்பது நீதி நிர்வாகத்தில் நீதிமன்றங்களினால் செயல்படுத்தப்படும் விதிகள் ஆகும்.

மனித நடத்தையை ஒழுங்குபடுத்தும் மத சம்பந்தமான சட்டங்களுடன் ஆளுகை கொள்ளும் மத அறிவியல் மற்றும் மத புராணங்களிலிருந்து இவ்வாறு சட்டவியல் மாறுபடுகிறது.



நீதி முறை சட்டங்கள் வெளிப்படையான மனித நடத்தையினை ஒழுங்குபடுத்துகிறது. அதுவே மத அறிவியல் மற்றும் ஒழுக்கவியல் கடவுளின் மீதான பயத்தின் மூலம் உள்ளிருக்கும் ஒழுக்கம் சார்ந்த நம்பிக்கைகளை ஒழுங்குபடுத்துகிறது.

### 3. சர் ஹாலந்து : (Sir Holland)

"இயங்கும் சட்டத்தின் (அரசுறுத்துச் சட்டம்) முறைசார்ந்த அறிவியல்" என சர்ஹாலந்து விரிவுரை தந்துள்ளார். முறைசார்ந்த அறிவியல் செயலுறுத்தும் சட்டக்கோட்பாடுகளின் அடிப்படைக் கொள்கைகளான சொத்து, ஒப்பந்தம், உடைமை, சொத்துரிமை, கவனக் குறைவு போன்றவைகள் பற்றி குறிப்பிடுகின்றது.

### 4. கிரே: (Gray)

நீதிமன்றங்களினால் கடைப்பிடிக்கப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட, வரிசைப்படுத்தப்பட்ட விதிகள் மற்றும் இவ்விதிகளில் உள்ள கோட்பாடுகள் மற்றும் விளக்கவுரை குறித்த சட்டத்தின் அறிவியலே சட்டவியல் ஆகும் என கிரே விரிவுரை தந்துள்ளார்.

### 5. கிளார்க் : (Clark)

பொதுவாக சட்டத்தின் அறிவியலே சட்டவியலாகும் என கிளார்க் பொருள் விளக்கம் அளித்துள்ளார்.

### 6. பியாலே : (Beale)

நீதியின் அறிவியலே சட்டவியல் என்று பியாலே பதவிளக்கம் அளித்துள்ளார்.

### 7. உல்பியன்: (Ulpian)

உல்பியன் ஒரு ரோமானிய சட்டவியல் அறிஞர். சட்டவியல் என்பது மனித இனம் மற்றும் தெய்வசக்திக்கு தொடர்புடையவை பற்றிய அறிவுத்திறன் என அவர் வரைவுரைக்கிறார். இது நேர்மை மற்றும் நேர்மையற்றது பற்றிய விஞ்ஞான அறிவும் ஆகும்.

சட்டவியல் பற்றிய உல்பியன் வரைவுரை மதஇயல் (தெய்வத் தன்மையின் அறிவு), ஒழுக்கவியல் (மனித நடத்தை பற்றிய அறிவு) மற்றும் தத்துவம் (நேரியது மற்றும் நேரியதற்றது பற்றிய விஞ்ஞானம்) அனைத்தும் கொண்டது.

சட்டவியல் பற்றிய உல்பியன் வரைவுரை ரோமானிய கலாசாரத்தின் ஆரம்பத்தில் இருந்த சட்டத்தினை அடிப்படையில் கொண்டது.

மேலும் அவரது வரைவுரை இந்து சமயத்தின் அறமுறையை (DHARMA) ஒத்துள்ளது. மதயியல், ஒழுக்கவியல் மற்றும் தத்துவததிற்கு முன்பே சட்டத்தின் அடிப்படையாக அறமுறை இருந்தது.

மனித இனத்தின் அடிநிலை மற்றும் தெய்வீக சேவையை அடைவதற்கு மனிதஇன நடத்தைக்கான விதிகளை அறமுறை வரையறுக்கிறது.

ஜாதிகள், தரநிலை போன்ற பாகுபாடன்றி அனைத்து மக்களுக்கும் அறமுறை பயன்படுத்தத்தக்கது.

**8. பேடன் : (Paton)**

சட்டவியல் என்பது ஒரு நாட்டின் சட்டமல்லாது சட்டத்தின் பொதுவான கருத்தியல்புகள் பற்றிய குறிப்பிட்ட வழிமுறையில் கல்வியாகும்.

சட்டவியல் பற்றிய மேல்குறிப்பிட்ட எட்டு வரைவுரைகளும் இரண்டு கருத்துகளை பற்றி வலியுறுத்துகிறது.

i. இது சட்டம் பற்றிய விஞ்ஞானம்

ii. இது சட்டம் பற்றிய கல்வியல்லாமல் அதன் அடிப்படைக் கோட்பாடுகள் ஆகும்.



**ஈ. சட்டவியலின் வகைகள் : (TYPES OF JURISPRUDENCE)**

சட்டவியல் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

**1. பொதுவான அல்லது அடிப்படை சட்டவியல்: (GENERAL JURISPRUDENCE)**

சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகள் பற்றி இது குறிப்பிடுகிறது. இது எல்லா சட்ட முறைகளுக்கும் பொதுவானது. சட்டவியல் என்ற வார்த்தையானது பொது சட்டவியலை குறிக்கப் பயன்படுத்தப் படுகின்றது.

(உ.ம்) அடிப்படைக் கோட்பாடுகளான “சொத்து”, “உடைமை” போன்றவைகள்.

**2. குறிப்பிட்ட சட்டவியல் : (PARTICULAR JURISPRUDENCE)**

இது தனிக்கூறுகளை உடைய ஒரு குறிப்பிட்ட சட்டமுறை பற்றி குறிப்பிடுகின்றது. (உ.ம்) பண்டைய இந்து சட்ட முறை, அமெரிக்க சட்டமுறை போன்றவைகள்.

**குறிப்பிட்ட மற்றும் பொது சட்டவியலுக்கிடையேயான வேறுபாடு: (Difference between Particular and General Jurisprudence)**

குறிப்பிட்ட சட்டவியல் (Particular Jurisprudence) என்பது சட்டத்தின் மெய்நிலையான எந்த ஒரு முறையைப் பற்றிய அறிவியல் என ஆஸ்டின் கூறுகிறார்.

இது சட்டவியலைப் பற்றிய குறிப்பான கல்வியாகும். அதாவது குறிப்பிட்ட சட்டவியல் என்பது சட்டத்தில் ஏதாவது ஒரு முறையின் அறிவியல் எனப்படும்.

பொதுவான அல்லது முழுதளாவிய சட்டவியலானது அனைத்து முறைகளுக்கும் பொதுவான பொருளுரைகள் மற்றும் சட்டங்கள் மற்றும் வேறுபட்ட சட்ட முறைகளுக்கிடையேயான ஒற்றுமைகள் குறித்த விளக்கம் ஆகும்.

பொது சட்டவியல் என்பது சட்டத்தின் முறைகளுக்கு பொதுவான கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் வேறுபாடுகளின் வெளிப்பாடு குறித்த அறிவியல் ஆகும்.

சால்மண்டின் கோட்பாட்டின் படி மேலே குறிப்பிட்ட முறையில் பிரிவு இயற்கைக்கு மாறானதாகவும் தன்மையற்றதாக உள்ளதாகவும் கருதப்படுகிறது.

பொது சட்டவியல் என்பது சட்ட முறையின் பொதுவான கல்வியல்ல. ஆனால் குறிப்பிட்ட ஒரு சட்ட முறையின் அடிப்படை கருத்தாய்வுகளின் கல்வி தான் சட்டவியல் என்றும் அவர் கூறுகிறார்.

ஹாலண்ட் கூறுகிறார்— குறிப்பிட்ட சட்டவியல் என்பது வரையறுக்கப்பட்ட எல்லையில் நீடித்தாலும் எல்லா இடங்களிலும் பொருந்துவதாகும்.

குறிப்பிட்ட சட்டவியல் என்ற பதம் சரியானதல்ல. பொதுவான மற்றும் குறிப்பிட்ட சட்டவியல் என்ற பதங்கள் ஒன்றையே வேறு பெயர்களில் வெளிப்படுத்தும் பதங்கள் என்பதால் சட்டத்தின் அடிப்படைக் கூறுகளின் அறிவியலை அவை வெளிப்படுத்துகிறது.

**3. ஒப்பீட்டு சட்டவியல் : (COMPARATIVE JURISPRUDENCE)**

பல்வேறு வகையான முறைகளின் அடிப்படை கோட்பாடுகளில் உள்ள ஒற்றுமைகள் மற்றும் வேறுபாடுகள் குறித்து படிப்பதே ஒப்பீட்டு சட்டவியல் ஆகும்.

இது ஒரு தனிப்பட்ட சட்டவியலின் ஒரு கிளையல்ல. ஆனால் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சட்டமுறைகள் பற்றி ஒப்பிட்டு படிக்கும் முறையாகும்.

(உ.ம்) பண்டைய ரோமன் சட்டத்தை பண்டைய இந்து சட்டத்துடன் ஒப்பிடுதல், அமெரிக்காவின் சட்ட முறையை இந்தியாவின் சட்ட முறையுடன் ஒப்பிடுதல் போன்றவைகளாகும்.



**உ. சட்டவியலின் தன்மை : (NATURE OF JURISPRUDENCE)**

சட்டவியலின் தன்மை குறித்து மூன்று வேறுபட்ட கருத்துக்கள் உள்ளன. பெரும்பாலான சட்ட வல்லுநர்கள் சட்டவியல் ஒரு சமுதாய அறிவியல் எனக்கூறுகின்றனர். மற்றவர்கள் இதனை முறைசார்ந்த அறிவியல் என கூறுகின்றனர்.

**1. சட்டவியல் சமூக அறிவியல் என்ற முறையில்: (JURISPRUDENCE - A SOCIAL SCIENCE)**

சமூக மற்றும் சமய, ஆன்மீக அடிப்படையில் மனித நடவடிக்கைகளைப் பற்றி பயில்வதே சமூக அறிவியலாகும். இவ் வாறாக சமூக அறிவியலானது இயற்கையான அறிவியலிலிருந்து மாறுபடுகிறது.

இயற்கையான அறிவியலானது மனித இனத்தின் உடலியல் மற்றும் உயிரியல் பற்றி விளக்குகிறது. சமூக அறிவியலானது மனிதனுடைய சமூக மற்றும் ஒழுக்க நடவடிக்கைகள் பற்றி விளக்குகிறது.

சட்டவியலானது சமூக அறிவியலின் ஒரு பிரிவாக வகைபடுத்தப்படுகிறது.

மேலும் இது மனித நடத்தையின் சமூக மற்றும் ஒழுக்க நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதுடன் அவற்றை விளக்கவும் முயற்சி செய்கிறது.

சமூக வாழ்க்கை பற்றிய நூல், நன்னெறி சார்ந்த நூல், சமய சித்தாந்தம் பற்றிய நூல் மற்றும் பொருளாதார நூல் ஆகியன மனிதனை சமூக உயிரினத்துடன் தொடர்புபடுத்துகிறது. அதனுடன் தொடர்புடைய சட்டவியலும் சமூக அறிவியலின் ஒரு பகுதியேயாகும்.

சமூகவியல், மதபுராணங்கள், மத அறிவியல், மனோதத்துவம் மற்றும் பொருளாதாரம் ஆகியவை மனிதன் ஒரு சமூகப் பொருள்

என்றும் அதனால் அவன் சமூக அறிவியலின் பகுதியாக சட்டவியலுடன் தொடர்பு கொண்டுள்ளான் என்றும் கருதுகிறது.

## 2. சட்டவியல் முறைசார்ந்த அறிவியல் என்ற முறையில்: (JURISPRUDENCE - A FORMAL SCIENCE)

இயங்கும் சட்டத்தின் (அரசுறுத்துச் சட்டம்) முறைசார்ந்த அறிவியலே சட்டவியலாகும் என சர்ஹாலந்து கூறுகிறார். சட்டம் பற்றிய கல்வியில் இது ஒரு முறைப்படியான அல்லது பகுப்பு முறை கல்வியாகும்.

முறைப்படியான அறிவியல் சில வலுவான விரிவுரைகளின் கீழமைந்த அடிப்படை கொள்கைகளோடு ஆளுமை கொண்டிருக்கும் அறிவியல் ஆகும்.

இது முக்கிய விபர அறிவியலிலிருந்து பின்வரும் வகையில் வேறுபடுகிறது. முக்கிய விவர அறிவியல் வலுவான விபரங் களுடன் மட்டுமே ஆளுமை செய்கிறது. அதுவே முறைப்படியான அறிவியல். அத்தகைய விபரங்களின் கீழமைந்த அடிப்படை கொள்கைகளோடு ஆளுமை செய்கிறது.

சட்டவியல் என்பது ஒரு முறைப்படியான அறிவியல் ஆகும். ஏனெனில் இது அனைத்து முக்கிய சட்ட முறைகளுக்கு பொது வான சில பொது அடிப்படை விபரங்களான சொத்து, சொத்துரிமை, உடைமை, உரிமை மூலம் பொறுப்பு நிலை போன்றவற்றின் கீழமைந்த நோக்கங்கள் மற்றும் கொள்கைகளோடு ஆளுமை செய்கிறது.

சட்டவியல் என்பது சட்ட அடிப்படைக் கொள்கைகளை அறியும் ஆரம்ப அறிவியல் என சர் சால்மண்ட் கூறுகிறார். அதாவது பொது கருத்துப் படிவங்களான சொத்து, ஒப்பந்தம், உடைமை, சொத்துரிமை போன்றவற்றோடு பற்றீடு கொள்வதால் வளர்ச்சியுற்ற உரிமையியல் சட்ட முறைக்கான அடிப்படையை அமைக்கிறது.



# ஊ. சட்டவியலும், பிற இயல்களுடன் அதன் தொடர்பும் [JURISPRUDENCE AND ITS RELATION WITH OTHER SUBJECTS]

## 1. விளக்கம்: (DEFINITIONS OF JURISPRUDENCE)

உட்பியன் எனும் ரோமானியச் சட்டவியலாளர் சட்ட வியலென்பது மனிதம் மற்றும் தெய்வீகம் சார்ந்த அறிவு என்றும் நீதிநெறி மற்றும் அதன்திரிபு சார்ந்த இயல் என்றும் கூறுகிறார்.

ஜுலியஸ் ஸ்டோன் என்பார் சட்டவியலென்பது ஒரு வழக்கரிஞரின் மிகையான இயலாகும் என்றும், தற்கால நட முறை அறிவிற்கேற்ப சட்டம் சாராத பிற துறைகளிலிருந்த பெறப்பட்ட சட்டம்சார்பான கொள்கைநெறிகளும் விளக்கமுறைகளும் பயன்பாட்டு விளைவுகளும் வழக்கறிஞரால் ஆய்வு செய்யப்படுதலே சட்டவியலாகும் என்றும் உரைக்கிறார்.

ஆஸ்டினின் கருத்துப்படி, சட்டவியல் என்பது நேர்மறைச் சட்டம் பற்றியே பேசுகிறது. ஆஸ்டின் சட்டவியலைப் பொதுச்சட்டவியல், சிறப்புச் சட்டவியல் என இரண்டாகப் பிரித்துள்ளார்.

சர். தாமஸ் ஏராஸ்கின் ஹாலந்தின் கருத்துப்படி, 'சட்டவியல் என்பது நேர்மறைச் சட்டம்பற்றிய சிறப்பு அறிவியலாகும்'.

ஜான் சால்மண்ட் என்பாரின் கருத்துப்படி, 'சட்டவியல் என்பது சட்டம் பற்றிய அறிவியலாகும்'.(Science of Law).

ஜி. டபிள்யு. பேட்டன் கருத்துப்படி, சட்டவியலென்பது குறிப்பிட்ட வகையில் பெறும் ஆராய்ச்சி அறிவாகும். அது ஒரு குறிப்பிட்ட நாட்டின் சட்டம் பற்றியதல்ல. அதன் பொது நெறிகள் சார்ந்ததாகும்.

## 2. சட்டவியலும் பிற சமூகவியல்களுடன் அதன் தொடர்பும் [RELATIONS OF JURISPRUDENCE WITH OTHER SOCIAL SCIENCES]

சட்டவியலுடன் பல்வேறு துறைசார்ந்த இயல்கள் மிகுந்த தொடர்புடையனவாக அமைந்துள்ளன.

பேட்டன் என்பாரின் கூற்றுப்படி, நவீன சட்டவியல் சமூக இயல்களுடனும் தத்துவ இயலுடனும் தொடர்புடையதாக அமைந்துள்ளது. வரலாற்று நிகழ்வுகளை ஆராய்ந்து அறிந்து, முரண்பாடுடைய பல சட்டப்பிரிவுகளின் சாரத்தினின்றும் முறையான கட்டமைப்பொன்றை அது உருவாக்குகிறது.

ஹார்வர்டு சட்டக்கல்விநிலையத்தினைச் சார்ந்த ரோஸ்கோ பவுண்டு என்பாரின் கருத்துப்படி, 'சட்டவியல், நன்னடத்தை நெறிகள், பொருளியல், அரசியல் மற்றும் சமூகவியல் இவையனைத்தும் அடிப்படையில் வெவ்வேறு வகையினைச் சார்ந்தது ஆயினும் ஒன்றிற்கொன்று தழுவியும், ஒன்றிற்கொன்று தொடர்புடையதாகவும் அமைகின்றன.

### i) சட்டவியல் மற்றும் சமூகவியலுக்கிடையிலான தொடர்பு (RELATION BETWEEN JURISPRUDENCE AND SOCIOLOGY)

சமூகவியல் சார்ந்த சட்டவியல் சமூகவியலின் சாராம்சங்களையே சார்ந்துள்ளது. சமூகத்தின் மீதான சட்டத்தின் தாக்கத்தைப் பற்றியும் குறிப்பாக சமூக மேம்பாட்டினைப் பற்றியும் அது உரைக்கின்றது.

எடுத்துக்காட்டாக:

1. சட்டவியலின் ஒரு கூறான குற்றங்களைப்பற்றி அறிய முற்படும் போது, அக்குற்றங்களின் காரணிகள் பெரும்பாலும் சமூகவியல் சார்ந்தவையாகவே அமைகின்றன. இவற்றின் நல்லன—அல்லன பற்றி அறிந்தகொள்ள சமூகத்தைப் பற்றிய விழிப்புணர்வும், தெளிவான நோக்கும் இன்றியமையாதனவையாகும்.



2. சிறைத்துறை நெறிமுறைகள் மேம்பாடுபற்றியும், சமூகக்குற்றங்கள் தடுப்புப் பற்றியும் சட்டவியலில் ஆராயப்படும் பிரச்சனைகளுக்குச் சமூகவியல் தீர்வளிக்கிறது.

3. சட்டம் சார்ந்த எல்லா விஷயங்களிலும் சமூகம் சார்ந்த நடை முறைகள் உள்ளன. குற்றங்களின் பல காரணிகள் சமூகம் சார்ந்தவையே குற்றத்தடுப்பு முறைகளுக்கும், சிறைத்துறை நெறிமுறை மேம்பாட்டிற்கும் சட்டம் இயற்றுபவர்களுக்குச் சமூகவியல் துணைபுரிகிறது.

4. தண்டனைகளின் காரணங்கள் நோக்கங்கள் மற்றும் கோட்பாடுகள் இவையனைத்திலும் சமூகக் கோட்பாடுகள் உள்ளடங்கியுள்ளன. பல்வேறு தண்டனை முறைகளிலும் சமூகவியல் பங்களிக்கின்றது.

5. சட்டவியற்கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு சமூகவியற் கல்வியானது ஒரு புதிய கண்ணோட்டத்தை வழங்குகிறது.

6. சட்டம்சார் சமூகவியலில் சமூகத்தின் நிலை வலியுறுத்தப்படுகிறது. ஆயினும் சமூகவியல் சார்ந்த சட்டவியலில் சட்டத்திற்கும் சமூகத்திற்குமான தொடர்பு வலியுறுத்தப்படுகிறது.

7. சட்டம்சார் சமூகவியலானது சமூகவியலின் ஒரு அங்கமாகும். சட்டம், சட்ட நிறுவனங்கள் இவையனைத்தையும் சமூகக் கோட்பாடுகள் மற்றும் நெறிமுறைகள், வகைகள் மற்றும் நோக்கங்கள் இவற்றின் பின்னனியில் ஆராய்ந்தறிகிறது.

### ii) சட்டவியல் மற்றும் உளவியலுக்கிடையிலான தொடர்பு: (RELATION BETWEEN JURISPRUDENCE AND PSYCHOLOGY)

1. உளவியல் என்பது மனம் மற்றும் நடத்தை சார்ந்த அறிவியலாகும். மனிதமனம் பற்றிய தெளிவான முழுமையான அறிவே அதனைச் சார்ந்த அறிவியல் பற்றிய விளக்கங்களை அளிக்க இயலும். எனவே, இப்பிரிவு சட்டவியலையும் சார்ந்தே இருக்கிறது.

2. குற்றவியல் சட்டப்பிரிவில், குற்றங்களின் பின்னனியில் இருக்கும் மனத்தின் நிறை, குறைகளை ஆராய்ந்து அறிய பெரும் வாய்ப்பு அமைந்துள்ளது.

3. குறிப்பிட்ட வழக்கில் வழங்கப்படவேண்டிய தண்டனையின் தன்மை குறித்தும், குறிப்பிட்ட சில சமூகச் சூழலில் குற்றங்கள் மற்றச் சூழலைவிடக் கூடுதலாக இருப்பது ஏன் என ஆராயவும், குற்றவாளியின் மனம் குற்றமிழைத்தலினால் நிறைவு பெறுகிறதா என்பது பற்றியும், குற்றவாளியின் தன்மை, குற்றத்தின் தன்மை மற்றும் காரணிகள் போன்ற பொருள்களைப் பற்றியும் குற்றவியலும் உளவியலும் விளைவுடன் ஆராய்கின்றன.

4. குற்ற அறிவியலில் உளவியல் பெரும்பங்கு வகிக்கிறது. குற்றவாளியைப் பற்றியும் குற்றமனத்தின் தன்மை பற்றியும் அறிந்துகொள்வது வழக்கறிஞரின் கடமையாகும்.

5. குற்றவாளியின் புறச்செயல்களும் நடவடிக்கைகளுமே குற்றவியலில் ஆராயப்படுகின்றன. அவரது எண்ணங்களும் மனவியலும் ஆராயப்படுவதில்லை. ஆயின், உளவியல் ஆராய்ச்சியாளர்களில் கண்டுபிடிப்புகளால் குற்றவியலும் பயன்பெற்றுள்ளது.

### iii) சட்டவியலும் நன்னெறிகலுக்கிடையிலான தொடர்பு: [Relation between Jurisprudence and Ethics]

1. நன்னெறி என்பது மனித நடத்தையின்பாற்பட்ட அறிவியற் பிரிவாகும். மனிதன் எங்ஙனம் நடந்து கொள்கிறான், உன்னத மான நன்னடத்தை என்பது எது என்பது போன்றவற்றை இந்தப் பிரிவு தீர்மானிக்கிறது. உன்னதமான நன்னடத்தை என்பதும் நேர்மறையான நன்னெறி என்பதும் இருவகைப் பட்டவையாகும்.

2. பெரும்பாலான நோக்கின்படி மனிதனின் நன்னடத்தை மற்றும் நன்னெறியினை இந்த இயல் தீர்மானிக்கிறது. பொதுக்கருத்து



இடத்திற்கு இடம் மாறுபடுகிறது. இஃது காலத்திற்கு ஏற்பவும், மக்களுக்கு ஏற்பவும் மாறுபடுகின்றது.

3. நேர்மறை நன்னெறியானது சட்டத்தின் வாயிலாகவே வலியுறுத்தப்படுகிறது. இதனையொட்டியே சட்டவியலும் அமைகிறது. நேர்மறை நன்னெறியென்பது நல்லதொரு மனிதனின் நல்ல செயல்களை மட்டும் சார்ந்திருப்பதல்ல. சமூகத்தின் ஒட்டுமொத்த நன்னெறியினை வலியுறுத்தும் வண்ணம் ஸ்திரமான கருவியாகப் பயன்படவேண்டும்.

4. சட்டத்தின்பாற்பட்ட நன்னெறி மற்றும் நற்கருத்துக்களை ஆராய்வதே சட்டவியலின் நோக்கமாகும். சமூகத்தின் ஒட்டுமொத்த மனச்சாட்சியினைப் பிரதிபலிக்கும் வகையில் தேவைப்படும் மாற்றங்களுக்கான ஆலோசனைகளையும் அது வழங்குகிறது.

5. குற்றமென்று தீர்மானிக்கப்படாத நன்னெறிக்குப் புறம்பான செயல்கள் பல உள்ளன. சட்டம் சிறு செயல்களைச் சட்டை செய்வதில்லை. உதாரணமாக, பொய்யுரைப்பது என்பது நன்னெறிக்கு ஒவ்வாதது. ஆயினும் அது குற்றமாகக் கருதப்படுவதில்லை.

நன்னெறிக்குப்புறம்பான அனைத்துச் செயல்களும் குற்றங்களே என்று கருத இயலாது. அதனைத் தீர்மானிக்கு சமூகத்தினால் அங்கீகரிக்கப்படாத, சட்டத்திற்குப் புறம்பான செயல்களாக அவை அமையவேண்டும். சட்டத்தினால் தடைசெய்யப்பட்ட அனைத்துச் செயல்களுமே நன்னெறிக்குப் புறம்பானவையாகக் கருதப்பட இயலாது.

நீதிமன்றம், தண்டனை முறைகள், காவலர்கள், நீதிபதிகள் போன்ற கருவிகளின் வாயிலாக நன்னெறிகளை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கின்றது.

6. சட்டமானது நன்னெறிகளைச் சார்ந்தே இயற்றப்படவேண்டும். அது நன்னடத்தைக்குப் புறம்பானதாய் அமையக் கூடாது. நன்னெறியை வலியுறுத்தாத எந்தச் சட்டமும் சிறப்பானதாக அமைவதில்லை. நன்னெறியானது நன்னடத்தை விதிகளைப் பற்றிக் கூறுகிறது. அவை வாழ்க்கையின் உயரிய உன்னதமான நெறிமுறைகளின் அடிப்படையில் அமைகின்றன.

### iv) சட்டவியலிற்கும் பொருளாதாரத்திற்கும் இடையேயான தொடர்பு:[Relation between Jurisprudence and Economics]

1. செல்வ வளத்தை உற்பத்தி செய்து பங்களிக்கவும் மனிதகுலத்தின் தேவைகளை நிறைவேற்றவும் மனிதனால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளைப் பொருளாதாரம் விளக்குகிறது.

2. பொருளாதாரம் செல்வத்தினைப்பற்றி ஆராயும் அறிவியற் பிரிவாகும். சட்டவியல் சட்டம் பற்றிய பிரிவாகும். எனினும் இரண்டிற்குமிடையே நெருங்கிய தொடர்பு உண்டு.

   பெரும்பாலும், பொருளாதார விஷயங்கள் குற்றங்களுடன் தொடர்புடையவையாகத் திகழ்கின்றன. பொருளாதாரச் சிக்கல்கள் அன்றாடம் எழுபவையாக உள்ளன. இத்தகு பிரச்சினைகளைச் சமாளிப்பது சட்டமியற்றுபவர்களின் கடமையாகும்.

3. பொருளாதார நிபுணர்களின் நோக்கம் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதாகும். மனிதவளத்தின் தரத்தை மேம்படுத்துவதும் அவர்களின் நோக்கமாகும். சமூகப் பொருளாதார மேம்பாட்டிற் கான நடவடிக்கைகளை மேற்கொள்ள, சட்டமியற்றுபவர்களுக்குச் சட்டவியல் அறிவுறுத்துகிறது.

4. பொருளாதாரமும் சட்டவியலும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வதற்கு முயற்சிக்கின்றன. தொழிலாளர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய காப்பீடு, பேறுகாலப் பயன்கள், இழப்பீடு, போனஸ், விடுமுறை, தொழிற்சாலை இன்ன பிற விஷயங்கள் பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.



5. சமுதாய மேம்பாட்டிற்காகச் சட்டவியலும், பொருளியலும் ஒன்றிற்கொன்று துணைபுரிகின்றன.

### v) சட்டவியலுக்கும் சரித்திரத்திற்குமான தொடர்பு: [Relation between Jurisprudence and History]

1. வரலாறு அல்லது சரித்திரம் பண்டைக்கால நிகழ்வுகளையும், அதன் பல்வேறு தாக்கங்களையும் பற்றி ஆராய்கிறது. சட்ட வியலுக்கும் சரித்திரத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. எனவே, 'வரலாற்றுச் சட்டவியல்' எனத் தனிப்பிரிவு உள்ளது.

2. சட்டவியலின் பின்புலத்தையும் வரலாற்றையும் சரித்திரம் வழங்குகிறது.

### vi) சட்டவியலுக்கும் அரசியலுக்குமான தொடர்பு: [Relation between Jurisprudence and Politics]

1. சட்டவியலானது ஒருபுறம் தத்துவ இயலுடனும், மற்றொருபுறத்தில் அரசியலுடனும் தொடர்புடையது.

2. அரசுசார் நிறுவனங்களின் தன்மைபற்றி அரசியல் எடுத்தியம்புகிறது. அரசியலின்படி நெறிப்படுத்தப்பட்ட சமுதாயத்தில் சட்டமாகக் கொள்ளப்படும் விதிமுறைகள் உள்ளன. பொதுமக்கள் செய்யத்தகுந்த, தகாத செயல்களைப்பற்றி இந்தச் சட்டங்கள் அதிகாரத்துடன் எடுத்துரைக்கின்றன.

## எ. சட்டவியலின் எல்லை, நோக்கங்கள் மற்றும் புறநிலைப் பொருள்கள்: (SCOPE, PURPOSES AND OBJECTIVES OF JURISPRUDENCE)

பின்வருவன சட்டவியலின் எல்லை, நோக்கங்கள் மற்றும் புறநிலைப் பொருள்கள் ஆகும்.

1. இது சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படை மற்றும் வளர்ச்சிக்காகும்.

2. சட்டத்திற்கு கோட்பாடு சார்ந்த அடித்தளம் அளிப்பதே இதன் புறநிலைப் பொருள் ஆகும்.

3. ஒரு சட்ட முறையில் இருக்கும் பொதுக் கூற்றினை அனைத்து கூட்ட முறைகளுக்கும் பரப்புவதே இதன் குறிக்கோளாகும்.

4. வழக்கறிஞர்கள் மற்றும் சட்டவியல் அறிஞர்கள் கோட்பாடுகள் குறித்து தெளிவாக அறிந்து கொள்ள பல சட்டப் பதங்களுக்கு வரைவுரைகள் வழங்க இது முயற்சிக்கிறது.

5. பல அடிப்படை சட்டக்கோட்பாடுகளுக்கு வரைவுரைகள் மற்றும் வரைவுரைகள் வழங்குவதன் மூலம் வழக்கறிஞர்கள் தங்கள் வாதங்களின் போது சட்ட பதங்களை சரியான முறையில் பயன்படுத்தவும் மற்றும் செய்சட்டங்கள் இயற்றுவதற்கும் இது வழி வகுக்கிறது.

6. சட்டக் கோட்பாடுகளில் வழக்கறிஞர்களுக்கு கற்பிப்பதன் மூலம் அவரை திறமையானவராக ஆக்க இது முயற்சிக்கிறது.

7. ஒழுக்கம் சார்ந்த கருத்துகளை உறுதிபடுத்துவதன் மூலம் முற்போக்கான அல்லது வளர்ந்து வரும் சமூகங்களுக்கு இது உதவியாய் இருக்கிறது.

8. கோட்பாடுகளை அதிகம் பகுத்தறிவுள்ளதாக ஆக்குவதன் மூலம் அவற்றின் செயற்பாட்டை முன்னேற்ற உதவும் வகையில் சட்ட வியல் கோட்பாடுகளை உருவாக்குகிறது மற்றும் தெளிவாக்குகிறது.

9. சட்டவியலுக்கு கல்வியளவிலான மதிப்பீடும் உண்டு. சட்டபூர்வ கோட்பாடுகள் வழக்கறிஞரின் தர்க்கவியலை கூர்மையாக்குகிறது.

10. சமூகத்தின் தேவைகள் விஞ்ஞான முன்னேற்றங்களுக்கேற்ப சட்டவியலில் உள்ள கோட்பாடுகள் மாற்றப்படுவதாக சட்டவியல் பற்றிய கல்வி வழக்கறிஞர்களின் நிலையான மற்றும் முறையான அணுகுமுறையை மாற்றுகிறது.



11. புதிய சட்டப்பிரச்சனைகளுக்கு விடைகளை கண்டுபிடிக்க தற்போதைய சமூகதேவைகள் உள்ளிட்ட அனைத்து பக்கங்களிலும் பார்த்து தேடுவதற்கு சட்டவியல் வழக்கறிஞர்களுக்கு கற்றுத் தருகிறது.

## ஏ. சட்டவியலை கற்பதனால் ஏற்படும் நன்மைகள்: (ADVANTAGES/VALUE OF THE STUDY OF JURISPRUDENCE)

1. சட்டவியலை அறிந்து கொள்வதில் ஒருவர் சட்டத்தின் அடிப்படைகள் பற்றி தெரிந்து கொள்ளலாம். அடிப்படை அறிவைப் பெறுவதுடன் சட்டத்தின் அடிப்படை கோட்பாடு களையும் அறிந்து கொள்ள முடியும்.

   சட்டவியல் படிப்பதினால் ஒரு வழக்குரைஞர் புதிய மற்றும் கடினமான சட்டப் பிரச்சனைகளையும் தீர்க்க முடியும். ஏனெனில் சட்டவியல் அறிவால் சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளை புரிந்து இப்பிரச்சனையைத் தீர்த்து வைப்பதில் வழக்குரைஞருக்கு சிரமம் இருக்காது.

   உடைமை பற்றிய விதிகளின் அறிவுத்திறன் சொத்தின் உண்மையான சொந்தக்காரர் யார் என்பதை அறிய ஒரு வழக்கறிஞருக்கு உதவும்.

2. செய் சட்டங்கள், வழக்காறுகள் போன்றவற்றின் உண்மையான அர்த்தங்களை விளக்க நீதிமன்றத்திற்கு சட்டவியல் உதவுகிறது.

3. சமுதாயத்தின் குடிமை வாழ்க்கையைப் புரிந்துகொண்டு அதற்கு ஏற்றாற்போல் மற்றவர்களுக்கு தீங்கு இழைக்காத விதத்தில் தங்களை சரிப்படுத்திக்கொள்ள மாணவ சமுதாயத்திற்கு இது உதவுகிறது.

4. தற்போதுள்ள சட்டத்தை மேலும் முன்னேற்றம் கொண்டு வருவதற்கு தேவையான மாற்றங்களைக் கூறுவதற்கு இது உதவுகிறது.

5. சட்டவியலில் இருக்கும் வரையறைகளின் காரணமாக செய்சட்டம் இயற்றுபவர்கள் ஒவ்வொரு தருவாயிலும் உரிமை, கடமை, கவனமின்மை போன்ற பதங்களை வரையறுக்க தேவையில்லை.

## ஐ. சட்டவியல் ‘உயரிய உரிமை சாசனம்’: (MAGNA CARTA)

‘உயரிய உரிமை சாசனம்’ (MAGNA CARTA) என்பது அரசரின் ஒப்புதலுடன் 1215 ல் பிரபலமற்ற இங்கிலாந்து அரசர் (King John) மன்னர் ஜானுக்கும், கலகப்புரட்சியாளர்களின் ஒரு பிரிவினருக்குமிடையேயான அமைதிசார் சாசனம் ஆகும்.

இது தேவாலய உரிமைகள் பாதுகாப்பு, புரட்சிக்கலகத்தாரின் சட்ட முரண் சிறைப்பிடிப்பிலிருந்து பாதுகாப்பு, விரைவான தீர்ப்புக்கு உரிய வழிமுறை மற்றும் அரசுக்கு கப்பம் செலுத்துவதில் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை பற்றி உறுதிமொழி எனினும் இரு பிரிவினருமே ஒப்பந்த உறுதிக்கு உட்படவில்லை.

ஜான் அரசரின் மறைவுக்குப் பின்னர், அவருடைய மகன் மூன்றாம் ஹென்றி, கலகப்புரட்சி போருக்குப் பின் மறுமுறையாக 1217ல் வெளியிட்ட, அமைதிசார் இப்பந்தத்தின் ஒரு பகுதியே (Magna Carta) மேக்ன கர்டா என்ற பெயரைப்பெற்றது.

இதுவே 1225ல் மறுமுறை வெளியிடப்பட்டு, 1297ல் பிரிட்டிஷ் அரசு சட்டத்தின் ஒரு பகுதியாக உறுதிபெற்றது. இதன் பின்னர் இங்கிலாந்து பாராளுமன்றம் புது சட்டங்களை நிறைவேற்றியதால் மேக்ன கார்ட்டா தனது நடைமுறை செயல்பாட்டில் சில முக்கியத்துவங்களை இழந்துவிட்டது.



1628ல் Magna Carta ல் மக்களுக்கான உரிமைகளில் மேலும் பலவற்றை உட்புகுத்தி உரிமைகள் (Petition of Rights) என்ற பெயரில் செய்முறை சட்டமாக பாராளுமன்றம் ஆக்கியது. இந்த மனுக்களுக்கான உரிமை சட்டம் மக்களின் உரிமைகள் குறித்தவகையில் அரசுக்கு மேற்பட்ட உயர்ந்த அமைப்பாக பாராளுமன்றத்தைக் கருதியது.

‘உரிமைகளுக்கான மனு’ Petition of Rights என்பதே 1689ல் உரிமைகளுக்கான மசோதா ‘Bill of Rights’ என்றாகி, மக்களின் உரிமைகளை பொருத்தவரை அரசைவிட பாராளுமன்றத்திற்கு உயர் அந்தஸ்தினை கொடுத்ததோடு, ஆவண அதிகாரக்குழு (Documentary Authority) ஆகவும் ஆக்கியது.

Megna Carta தான் ஐக்கிய அமெரிக்க குடியரசின் உயரிய சட்டமாக உருப்பெற்ற அமைரிக்க அரசியலமைப்பு சட்ட வரைவுக்கு உரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

இப்போதும் Megna Carta தான் ‘உரிமை’யின் முக்கிய அடையாள சின்னமாக கருதப்படுவதோடு, பிரிட்டிஷ் அரசு மற்றும் காலனிகள் ஆட்சிகளாலும், அமெரிக்க சட்டப்பூர்வ சமுதாயங் களாலும் (American Legal Communities) மிக உயரிய அந்தஸ்துக்குரியதாக மதிக்கப்படுகிறது.

Megna Cartaன் படி, மன்னராட்சிகள் (முடியாட்சிகள்) தங்கள் நாட்டின் பழக்கவழக்கங்கள், சட்டம் ஆகியவற்றிற்கு இசைந்த வகையில் மக்களின் உரிமைகளை மதித்து அரசாள வேண்டும் என்பதே.

## ஒ. முடிவுரை : (CONCLUSION)

இவ்வாறு, சட்ட விதிகளை ஆராய்ச்சிக்கு உட்புகுத்திட நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும், நீதி சமூக பொருளாதார, அரசியல் சார்ந்த மிக உயரிய அமைப்பு உருவாவதற்கு உறுதிப்படுத்தும் வகையிலான குறிக்கோளை முன் நிறுத்துகிறது.

**முந்தைய பல்கலைக்கழக வினாக்கள்**

1. "சட்டவியல் என்பது சட்ட அடிப்படைக் கொள்கைகளை அறியும் ஆரம்ப அறிவியல்"— சால்மன்ட் விரிவாக்குக?
2. சட்டவியலின் பதவிளக்கம் தருக. சட்டவியலின் தன்மை மற்றும் வகைகள் பற்றி விவாதி.
3. "சட்டத்தின் ஆதாரக் கொள்கைகளை அறிவியல் அடிப்படையில் தொகுத்து நோக்குவதே சட்டவியல்" C.K. ஆலென். கருத்துரைக்க?
4. சட்டவியல் ஒரு சமூக அறிவியல் —கருத்துரைக்க?
5. சட்டவியலின் சில வரையறைகளை விளக்குக?
6. சட்டவியல் என்பது அடிப்படை சட்டக் கோட்பாடுகளின் கல்வி. இதர சட்டப் பொருளுரைகளின் கல்வியிலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது?

ஐ ஐ ஐ



# 2. ஆஸ்டினின் சட்ட வரைவுரை (அரசாண்மை கோட்பாடு அல்லது அரசின் ஆணையே சட்டம் அல்லது மேலுறுத்தக் கோட்பாடு அல்லது ஆணை கோட்பாடு)

## (AUSTIN'S DEFINITION OF LAW )

## [THEORY OF SOVEREIGNTY OR IMPERATIVE THEORY OR SANCTION THEORY OR COMMAND THEORY]

**பாடச்சுருக்கம் : (SYNOPSIS)**

அ. வரைவுரை

ஆ. ஆக்கக்கூறுகள்

- I. கட்டளை (அ) ஆணை
  - i. குறிப்பிட்டக் கட்டளை
  - ii. பொதுக்கட்டளை
- II. அரசாண்மை
  - i. பதவுரை
  - ii. சிறப்பியல்புகள்
  - iii. அரசாண்மை கோட்பாடுகள்
  - iv. திறனாய்வுகள்
- III. தண்டனை (அ) செயலுறுத்தம்

இ. திறனாய்வு

ஈ. முடிவுரை